மேலொப்பம் /கடித எண்.ஒய்3/12364/2015

வணிகவரி ஆணையர் அலுவலகம்,
சென்னை–5.
நாள். 06.08.2020

அரசாணை (ப) எண்.118, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள்.22.07.2020 இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

ஒம்./– ப்பி. ரகுநந்தன்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)(மு.கூ.பொ)க்காக

பெறுநர்
திரு. AE. S. மினோல், இளநிலை உதவியாளர்,
முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம்,சென்னை–5.

நகல்
உதவியாளர் 'ஒய்1' – பிரிவு (பணிப்பதிவேட்டில் பதியும் பொருட்டு)
இருப்பு கோப்பு–ஒய்3.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்
13/8/2020

12/8/2020

சுருக்கம்

பணியாளரமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை – திரு AE. S. மினோல், இளநிலை உதவியாளர் என்பவர் கருணையடிப்படையில் 20.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண். 118

நாள்: 22.07.2020
சார்வரி, ஆடி–7,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டன:

1. இணை ஆணையர் (நிர்வாகம்), சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.ஒய்3/12364/2015, நாள் 12.11.2018.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்3/12364/2015, நாள் 24.02.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த போது 30.11.2013 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி எஸ்.கலைவாணி என்பவரின் கணவர் திரு ஈ. ஸ்ரீதர் என்பவர் தனது மகன் திரு AE. S. மினோல் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 13.10.2016 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு AE. S. மினோல், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சென்னை இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 20.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு AE. S. மினோல் என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 20.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு AE. S. மினோல் என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம்

வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வணிகவரித் துறையில் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த போது 30.11.2013 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி எஸ்.கலைவாணி என்பவரது மகன் திரு AE. S.மினோல் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வணிகவரித் துறையில், முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 20.11.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 9816/ட்டி.1/2020–1, நாள் 16.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 16849/ஜி2/2020–1, நாள் 18.07.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

திரு AE. S. மினோல், இளநிலை உதவியாளர்,
முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (நிர்வாகம்), சேப்பாக்கம், சென்னை.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி–1) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/7/20
பிரிவு அலுவலர்
24/7/20